# இயல்-2 கோணக்காத்துப்பாட்டு

**சிறு வினா.**

1. புயலால், உயிர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?
   - வாங்கல் என்னும் ஊரில் வைக்கப்பட்ட தென்னம்பிள்ளைகள் வீணாயின.
   - காங்கேய நாட்டில் வளர்ந்திருந்த பருத்திச் செடிகள் சிதைவு அடைந்து குச்சிகளாக மாறின.
   - ஆடவர்கள் மனைவி, பிள்ளைகளுடன் ‘கூ கூ என்று அலறியபடி ஓடினர்.
   - தொண்டைமான் நாட்டில் வைக்கப்பட்ட மரங்கள், ஒடிந்து விழுந்தன.
   - ஆர்க்காடு முதல் மைசூர் வரை வீசிய புயலால் சாலைகளில் சென்ற மக்கள் தடுமாறித் தவித்தனர்.
   - தெத்துக்காடு, காளப்பநாயக்கன்பட்டி ஆகிய பகுதிகளில் ஏராளமான ஆடுமாடுகள் இறந்தன.
   - சித்தர்கள் வாழும் கொல்லி மலையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் புயல் அடித்தது.

2. இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கச் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?